Indian Vedic School
Language of the Gods

# FAMOUS MORAL STORIES

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 10


















# INDEX


| | |
|---|---|
| JUDGEMENT | 1-11 |
| KING & THIEF | 12-24 |
| KNOWLEDGE | 25-32 |
| LESSON FROM GHOST | 33-41 |
| LOVE FOR FATHER | 42-49 |
| LOVE FOR MOTHERLAND | 50-56 |


தீர்ப்பு


ஹார்திப் நாடு லூயீஸ் என்ற அரசனால் ஆளப்பட்டு வந்தது.
ஜென்னி என்று பெயர் கொண்ட ஒரு மகள் அரசன் லூயீஸுக்கு இருந்தாள். அவள் மிகவும் அழகாக இருந்தாள்.
பல இளவரசர்கள் அவளை மணக்க ஆசை கொண்டிருந்தனர்.
NO...
ஏதாவது காரணம் சொல்லி, அவள் மறுத்து வந்தாள்.


இளவரசிக்கு ஓர் விசித்திரமான பழக்கம் இருந்தது. அவள் ஒவ்வொரு இரவும் கனவு காண்பாள். அந்த கனவுக்குத்தக்க மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுவாள்
அதே போல் ஒரு இரவு இளவரசி கனவு கண்டுகொண்டிருந்தாள் .....
ஒரு அழகான வாலிபன் அரண்மனையின் சுவற்றில் ஏறி குதிக்கிறான்.
அவன் இவள் அறைக்குள் நுழைந்து, அவளை நெருங்குகிறான்.


இளவரசி திடீர் என விழித்துக்கொண்டு, இது கனவு என்பதை புரிந்து கொள்கிறாள்.
அடுத்த நாள், இளவரசியின் கட்டளைப்படி காவலர்கள் சில வாலிபர்களை பிடித்து வருகின்றனர்.
அவர்களில் சைமான் என்றவன் அவள் கனவில் வந்தவன் போல் இருந்தான்.
இவனை சிறையில் அடையுங்கள்.
சென்ற இரவு, இவன் சுவர் ஏறி குதித்து என் அறைக்குள் வந்தான். இவனுக்கு மரண தண்டனை விதிக்க நான் கேட்டுக்கொள்கிறேன்.
இளவரசியே, நான் அது போல் ஒன்றும் செய்யவில்லை.


அரசனுக்கு அவன் மகளுடைய செய்கை தெரியும், ஆனால் அவள் மனது நோகாமலிருக்க, தண்டனையை நிறைவேற்றும் படி சிப்பாய்களிடம் சொல்லி விட்டான்.
அந்த மாதிரியான பிரச்சனைகள் இருந்து வந்தன, யாராலும் அவளை குணப்படுத்த இயலவில்லை
ஒரு நாள் ஒரு விந்தையான விவகாரம் அரச சபைக்கு வந்தது.
மன்னா, ஆடிசனும் அவனுடைய அம்மாவும் எனக்கு 1000 பொற்காசுகள் கடன் பட்டு இருக்கிறார்கள். ஆடிசன் என் மகன், அவன் அம்மா என்னுடைய மனைவி.
ஆடிசனையும் அவன் அம்மாவையும் கொண்டு வாருங்கள்.
அடுத்த நாள், ஆடிசனையும் அவன் அம்மாவையும் பார்த்து அரசன் ஆச்சரியப்பட்டான்
உன்னுடைய புகார், எவ்வளவு தப்பாக இருக்கிறது என்பது ஆடிசனின் வயதையும் அவன் அம்மாவுடைய வயதையும் பார்க்கும் பொழுது தெரிகிறது. ஆடிசன் உன் மகனாகவும் அவன் அம்மா உன் மனைவியாகவும் இருக்க முடியாது.


மன்னா, இவன் வயதையும் படிக்க போய் சில நாட்கள் முன்பு தான் திரும்பினான். இவன் என்னைவிட சிறியவனாக இருக்கிறான். எப்படி என் அம்மாவுக்கு கணவனாக முடியும்.
நான் இவனிடமிருந்து எந்த பணமும் வாங்கவில்லை.
நீ அவனிடம் பணம் வாங்கினாயா இல்லையா என்பதை முதலில் கண்டு பிடிப்போம். டேனியல் உன் புகாரை சரி என்று சொல்ல உன்னிடம் சாட்சி யாராவது இருக்கிறார்களா?
ஆமாம் அரசே, இளவரசியின் குதிரை தான் என்னுடைய மாமனாராக முந்தைய பிறப்பில் இருந்தார். அவர் எங்கள் திருமணத்தில் வரதட்சணை தருவதாக வாக்குறுதி கொடுத்திருந்தார்.


நான் வரதட்சணை பெற பத்து வருடங்கள் போராடி இறந்து விட்டேன். ஆடிசனுக்கு அப்பொழுது பத்து வயது. இப்பொழுது நான் டேனியலாக பிறந்திருக்கிறேன்.
நான் போலந்திலிருந்து வந்து கொண்டிருக்கும் பொழுது கனவு கண்டேன். அதில் இந்த 1000 பொற் காசுகளைப்பற்றி தெரிய வந்தது.
ஆக, நான் திரும்பி வந்த பின் ஆடிசன் வீட்டிற்கு போய் 1000 பொற் காசுகளைப்பற்றி கேட்டேன். ஆடிசன் என் மாமனார் சொத்தின் மரபுரிமை பெற்றிருக்கிறான். ஆகவே, அவன் எனக்கு வட்டியோடு பணத்தை தரவேண்டும்.
மன்னா, என் மாமனார் என் கனவில், அவர் என்னை ஏமாற்றி விட்டதால், இந்த பிறவியில் குதிரையாக பிறந்தேன் என சொன்னார். தயவு செய்து அவரை அழையுங்கள்.


ஹா....ஹா.... ஹா.... உன் கதை ஆச்சரியமாக உள்ளது. உன்னையும் உன் கனவையும் நம்பி எப்படி உனக்கு 1000 பொற் காசுகள் தர முடியும்.?
என்னை மன்னித்து விடுங்கள் மன்னா, ஆனால் நீதியில் இரண்டு விதமான நிலைகள் இருக்க முடியாது, அரச குடும்பத்திற்கு ஒன்றும், மக்களுக்கு ஒன்றுமாக. நியாயம் அனைவருக்கும் சமமே.
இளவரசியின் கனவுகளையும், அவள் கனவில் வந்தவர்கள் தண்டிக்கப்பட்டதையும் மக்கள் அறிவர். எப்படி என் மாமனார் கனவில் பொய் சொல்ல முடியும்.
என் கோரிக்கை என்னவென்றால், இளவரசியின் குதிரையை அழைத்து உண்மையை அறியவும்.


அரசன் தன் தவறை உணர்கிறான்.
சபாஷ் டேனியல், வயதில் நீ சிறியவனாக இருந்தாலும் தைரியத்துடன் புத்திசாலித்தனமாக நடித்து என் தவறை உணர்த்தினாய். நான் உன்னை பாராட்டுகிறேன்.
எனக்கு இப்பொழுது சொல், நீ ஒரு நீதிபதியாக இருந்தால், இந்த பிரச்சனையை எப்படி, தீர்ப்பாய். உன்னுடைய தீர்ப்பை அனைவரும் ஏற்றுக்கொண்டால், நானும் அதன்படி நடந்து கொள்கிறேன்.


கல்யாண வயதில் திருமணமாகாததால், விசித்திரமான கனவுகள் இளவரசிக்கு வருகின்றன.
மன்னா, இளவரசி மணம் செய்துகொள்வதுதான் இதற்கு சரியான தீர்ப்பு.
சபையிலிருந்த அனைவரும் கை தட்டுகிறார்கள். அமர்ந்திருந்த இளவரசி தலை தொங்கினாள்.
அற்புதம், உன்னைவிட பொருத்தமான மருமகன் எனக்கு கிடைக்க மாட்டான். என் மகளை திருமணம் செய்துகொள், உன்னுடைய அபிப்ராயம் என்ன ?


நன்றி மன்னா, இளவரசியின் விருப்பத்தையும் நான் அறிய விரும்புகிறேன்.


இளவரசி அவள் சம்மதத்தை தருகிறாள். இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது.


ஓர் இரவு ...
நான் வேறு யாரையும் கனவில் பார்த்தால் என்ன ?
கவலைப்படாதே. நான் தான் உன் கனவில் இருப்பேன்.
முடிவு


அரசனும் திருடனும்


ப்ரன்ஸ்விக் இராஜ்ஜியத்தை சிறந்த அரசர் ஜார்ஜ் ஆண்டு வந்தார். தன் பயிற்சியை முடித்துக்கொண்டு, இளவரசன் ஆஸ்கார் இராஜ்ஜியத்திற்கு திரும்பி வந்தான்.
வீட்டிற்கு வருக மகனே! திரும்பி வந்த உன்னை பார்த்து மகிழ்சி அடைகிறேன்.
நன்றி அப்பா. திரும்பி வந்தது நன்றாக உள்ளது.
நன்றி அப்பா. திரும்பி வந்தது நன்றாக உள்ளது.
அமாம் ஆஸ்கார், நமது இராஜ்ஜியம் ஒரு கொள்ளைக்காரன் ரோஜர் கில்லாடி என்பவன் மேல் பயத்தில் இருக்கிறது. நம்மால் அவனை பிடிக்கவோ, அவன் இருப்பிடத்தை கண்டு பிடிக்கவோ முடியவில்லை.


ஆகவே, நீ
மாறு வேடம் போட்டு
அவன் குழுவில்
சேர்ந்துகொள்.
ரோஜரின்
தந்திரங்களை
அறிந்து கொண்டு,
அவைகளால்
அவனை
பிடித்து விடு.
இளவரசன் மாறு வேடத்தில் ரோஜரை தேடிப்போகிறான்.
இளவரசன் ஒரு திட்டம் போட்டான். அவன் ஒரு
திருடனைப்போன்ற ஒரு காட்சியை உண்டாக்கி, அரச காவலர்
களிடமிருந்து தப்பிக்க காட்டுக்குள் சென்று விட்டான்.


திடீர் என இளவரசன் ஒரு வலையில் சிக்கிக்கொண்டான்.
OHHH!
ஒஹ், அவன் இங்கே இல்லை, நாம் அந்தப்பக்கம் போவோம்.
இதை கவனியுங்கள் !!
யார் நீ ? ஏன் காவலரை கண்டு ஓடுகிறாய் ?


ஐயா, காவலரிடமிருந்து என்னை காப்பாற்றியதற்கு நன்றி. என் பெயர் மார்கஸ். உண்மையில், அந்த காவலர்கள் ... உம்ம்ம் , ஐயா, நான் ஒரு திருடன். உண்மையில் நான் ரோஜர் கில்லாடியை சந்திக்க போய்க் கொண்டிருந்தேன், ஆனால் வழியில் காவலர் என்னை துரத்தி வந்தனர்.
சரி, என்னுடன் வா, நான் தான் ரோஜர்.
ரோஜர் இளவரனை தன் மறைவிடத்திற்கு அழைத்துச்செல்கிறான்.
கவனியுங்கள், இவன் மார்கஸ், இவன் இன்றிலிருந்து நம்முடன் வேலை செய்வான்.


மார்கஸ், என்னிடம் உனக்கு ஓர் கேள்வியுள்ளது. திருடுவது குற்றமா இல்லை, பாவமா?
அரசனின் பார்வையில், அது குற்றம், இறைவனின் பார்வையில் அது பாவம், நமது பார்வையில் அது நம் தொழில். ஆகவே, இது சரி.
வேலை செய்வது, இறைவனை வணங்குவதற்கு சமம், நாம் வாழ நமது வேலை திருடுவது, ஆகவே, நாம் இதை செய்வதில் ஒன்றும் தப்பில்லை.
ரோஜர் மார்கஸ் வார்த்தைகளால் மகிழ்ச்சியடைந்தான், மேலும் அவனுக்கு பயிற்சி அளிக்க ஒப்புக்கொண்டான்.


மார்கஸ், உன்னுடைய பயிற்சி இன்று ஆரம்பமாகிறது. கற்றுக்கொள்வதில் நீ நேர்மையாக இருக்க வேண்டும்.
உன் பயிற்சியால், நான் கௌரவிக்கப்பட்டேன். நான் என் சிறந்த முயற்சிகளோடு பயில்வேன்.
ஒரு நாள் ... காட்டிற்கு அருகிலுள்ள வீட்டை கொள்ளையடிக்க திட்டம் தீட்டினர்.
வீட்டை அடைந்ததும், யாரோ பேசுவதை கேட்டனர் ....
நம் மகள் கல்யாணத்திற்கு நாம் கடுமையாக உழைத்து பணம் சேமித்துள்ளோம். நன்றி ஆண்டவனே.
ஆமாம், எல்லாம் நன்றாக நடக்கிறது.


ஐயா, இந்த வீட்டில் திருட வேண்டாம்.
நீ ஏன் அப்படி சொல்கிறாய்
நாம் ஒட்டு கேட்டதிலிருந்து என்ன அறிந்து கொண்டோமென்றால், பெற்றோர்கள் கடுமையாக உழைத்து மகள் திருமணத்திற்கு பணம் சேர்த்துள்ளனர். அவர்கள் ஏழைப் போலவும் தெரிகிறது. அவர்களிடம் பணம் திருடுவது, பாவமாகும்.
ஆனால்
ஐயா, தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள், நாம் இந்த பணத்தை திருடினால், ஆண்டவன் நம்மை மன்னிக்கவே மாட்டான். நம் தொழிலில் சில சமயம் நாம் விதிவிலக்கு செய்ய வேண்டும். தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.
ரோஜர் மார்கஸை வீணாக நம்ப வைத்து சோர்ந்து போனான்,


சில மாதங்கள் கழித்து ..
மார்கஸ் நீ உன் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து விட்டாய். இப்பொழுது நீ சுதந்திரமாக வேலை பார்க்கலாம்.
ரோஜர் ! நான் மார்கஸ் இல்லை, நான் ஆஸ்கார் ப்ரன்ஸ்விக் நாட்டின் இளவரசன். உன்னுடைய குழுவில் சேர்ந்து உன்னை கைது செய்ய மாறு வேடம் போட்டேன்.
மார்கஸ் ரோஜரை கைது செய்ய முயற்சிக்கும் பொழுது, அருகிலிருந்த சுவற்றில் வினோதமாக ரோஜர் ஏறி விடுகிறான்.
ஹேய், நீ எந்த தந்திரத்தையும் எனக்கு சொல்லித்தரவில்லை
ஆமாம், சில நாட்களுக்கு முன் தான் நீ இளவரசன் என தெரிந்து கொண்டதனால், சொல்லித்தரவில்லை.


உன் முதல் நாள் அன்று நான் உன்னிடம் ஒரு கேள்வியைக்கேட்டேன், ஞாபகம் இருக்கா ? உன்னுடைய பதில் அரச சிந்தனையாக இருந்தது.
உன் அடையாளத்தை சந்தேகப்பட்டு, நான் உன்னைப்பற்றி விசாரித்தேன். என் யூகப்படி நீ இளவரசன் என தெரிய வந்தது.
ரோஜர், நீ நல்லவன். எதற்காக நீ கொள்ளையில் ஈடுபடுகிறாய்? நீ என்னிடம் சரணடைந்து விடு. உனக்கு மன்னிப்பு நான் வாங்கித் தருகிறேன்.
இளவரசனே, உன் வார்த்தைகளை நினைவூட்டிக் கொள். 'செய்யும் தொழிலே தெய்வம்' ஆகவே நான் என் வழிபடுகிறேன்.


எனக்கு ஒரே ஒரு ஆசை தான் உள்ளது ... நீ உன் இராஜ்ஜியத்திற்கு சென்ற பின், மக்களை என்னைப்போல் தொழில் மேற்கொள்ளாமலிருக்க பார்த்துக்கொள்.
நிச்சயமாக, நான் என் மக்களை நல்ல முறையில் கவனித்துக்கொள்கிறேன்.
ரோஜர் காட்டிற்குள் தப்பிச்செல்கின்றான், இளவரசன் திரும்பி இராஜ்ஜியத்திற்கே வந்து விடுகிறான்.


இளவரசன் ஆஸ்கார் திரும்பியதும் ...
மகனே, நீ ரோஜரை கைது செய்து உடன் அழைத்து வருவாய் என எதிர்பார்த்தேன். என்ன வாயிற்று ?
உங்களை ஏமாற்றம் அடையச்செய்ததற்கு வருந்துகிறேன், அப்பா. ஆனால், சென்ற சில மாதங்களாக நான் அவனுடன் வேலை செய்ததில், தொழிலால் அவன் திருடனாக இருந்தாலும், இரக்கமுள்ள, நல்ல மனதைப்படைத்தவனாக நான் அவனை கண்டேன்.
என் பயிற்சி முடிந்த பின் நான் அவனுக்கு பரிசளிக்க அழைத்தேன். அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா? அவன் மக்கள் திருட்டுத் தொழிலை தேர்ந்தெடுக்காமலிருக்க கவனித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான்.
நான் நினைத்தால், அவனை கைது செய்ய முடியும் என்பதை அவன் அறிவான், இருப்பினும் அவன் நமது மக்களின் நலனை வேண்டிக்கொண்டான்.


அப்பா, இந்த பணிக்கு என்ன அனுப்பியதற்கு மிக்க நன்றி. வாழ்க்கையைப் பற்றி நான் நிறைய தெரிந்து கொண்டேன்.
மகனே, உண்மையை சொல்லப்போனால், நான் ரோஜருக்கு நன்றி சொல்ல வேண்டும், ஏனெனில் அவன் என் மகனை ஒரு அனுபவமுள்ள ஆளாக்கி விட்டான்..
என் ஓய்வு காலமும், ராஜாவாக நீ முடி சூடும் நேரமும் வந்துவிட்டதாக நான் நினைக்கிறேன்
இளவரசன் ஆஸ்கார் ப்ரன்ஸ்விக் மன்னனாக முடி சூட்டப்பட்டான்.
முடிவு


அறிவு


ஒரு கிராமத்தில் காசிபூ என்ற பையன் இருந்தான்.
காசிபூ ஒரு அனாதை. அவனுடைய பெற்றோர்கள் அவன் சிறு பிள்ளையாக இருக்கும்பொழுதே இறந்து விட்டனர். வயது வந்த அவனுடைய பாட்டி அவனை பத்து வயது வரை வளர்த்தாள்.
அவள் இறந்த பிறகு, காசிபூவை கவனிக்க யாரும் இல்லை.
அவன் வளரும் பொழுது, அப்பாவித்தனத்தால் அவன் வாழ்க்கை கடினமாகிக்கொண்டிருந்தது. மற்ற பையன்கள் அவனை துன்புறுத்தியும், தாக்கியும் வந்தனர்.


காசிபூ கிராமத்து மக்களின் ஆடுகளையும் பசு மாடு களையும் மேய்த்து வந்தான். அவர்கள் அவனுக்கு உணவு அளித்து வந்தனர்.
ஒரு நாள் காசிபூ தன் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தான்.
காசிபூ போய் மரத்திலிருந்து அந்த மாங்காயை பறித்து வா.
மாட்டேன், தோட்டக்காரர் என்னை அடிப்பார்.
டேய், பயப்படாதே. உனக்கு ஒன்றும் ஆகாது. காசிபூ
காசிபூ மாங்காய் பறிக்கும் பொழுது பிடிபட்டான். இதைப்பார்த்து மற்ற பையன்கள் ஓடி விட்டனர்.
என்ன தைரியம்டா உனக்கு, என் மாங்காயை திருட
காசிபூ ஆற்றங்கரையில் அமர்ந்து அழுது கொண்டிருந்தான்.


திடீர் என ஒரு மின்னல்...
ஒரு அழகான தேவதை அம்மா தோன்றினாள்.
ஷ் ஹூ.. யார் நீ ?
நான் உன்னுடைய, தேவதை அம்மா.
தேவதை அம்மா வா ....? .
. ஆமாம் காசிபூ.


அழாதே, உனக்கு என்ன வேண்டும் மகனே.
எனக்கு பணம் வேண்டும் தேவதை அம்மா. நான் பணக்காரனாக இருந்தால் அனைவரும் எனக்கு மரியாதை செலுத்தி தொந்தரவு கொடுக்காமல் இருப்பார்கள்.
நான் உனக்கு ஒரு மந்திர பையை தருகிறேன். உனக்கு பணம் வேண்டும்போதெல்லாம் நீ கையை விட்டால் பணம் வரும்.
ஆஹா
ஆனால் நீ மட்டும் தான் பணத்தை எடுக்க முடியும். மற்றவர்களால் முடியாது., மேலும், ஒரு நாளைக்கு ஒரு முறை தான் நீ பணம் எடுக்க முடியும்.
நிச்சயமாக அம்மா, நான் நினைவில் வைத்துக்கொள்கிறேன். உங்கள் உதவிக்கு நன்றி.


காசிபூ கிராமத்திற்குப் போய் எல்லாவற்றையும் கிராமத்தினருக்கு விளக்குகிறான்.
இந்த பையை சோதித்து பார்ப்போம்.
காசிபூ பையில் கை விடும் பொழுது பணம் வருகிறது. மற்றவர் முயற்சிக்கும் பொழுது ஒன்றும் வருவதில்லை.
சில நாட்களுக்குப்பின் ... காசிபூ இந்த ஆசி யால் மகிழ்ச்சியோடு இருந்தான். ஆனால் அடுத்த பக்கம், இவன் வாழ்க்கை துன்பகரமாக ஆகிவிட்டது. கிராமத்தினர் காசிபூவிடம் வந்து தமக்கு பணம் எடுத்து கொடுக்கும் படி செய்தனர்.
ஒரு நாள்...
போதும் போதும் என்றாகி விட்டது. நான் பையிலிருந்து இனி பணம் எடுக்க மாட்டேன்.
கிராமத்தினர் அவனை அடித்து, அவனிடம் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டனர். அந்தப்பையையும் பிடுங்கி, அதை, அழித்து விட்டனர்


காசிபூ வாழ்க்கையில் சோர்ந்து போனான். ஆற்றங்கரைக்கு போய் அழ ஆரம்பித்தான்.
திடீர் என தேவதை அம்மா, இன்னொரு தேவதையுடன் வந்தாள். தேவதை அம்மா மற்ற தேவதைக்கு அனைத்தும் விளக்கினாள்.
ஏழை காசிபூ நீ கொடுத்த பணத்தை உபயோகிக்க முடியவில்லை, என்பதை நீ பார்த்தாய். அவனுக்கு பணத்தை விட அறிவு தான் அதிகம் தேவை.
அவள் காசிபூவுக்கு அறிவை தருகிறாள்.
காசிபூவுக்கு அறிவு கிடைத்தவுடன், அவன் அழுவதை நிறுத்தி விட்டு, கிராமத்துக்கு சென்றான்.


இரண்டு தேவதைகளும் பேசிக்கொள்கின்றனர்.
திறமையுள்ளவருக்கு பணம் கொடுப்பது தவறு.
நீ அவனுக்கு அறிவை கொடுத்தாய், மீண்டும் பணப்பையை கொடுத்து இருக்கலாமே.
திறமையுள்ளவருக்கு சுலபமாக பணம் கிடைத்தால், அவர்கள் சோம்பேறியாகவும் உதவாக்கரையாகவும் ஆகிவிடுவர். காசிபூ அவனுடைய அறிவினாலும், உழைப்பினாலும் பணம் சம்பாதிப்பான்.
தேவதை சொன்ன மாதிரி, சில வருடங்களுக்குள் காசிபூ தன் அறிவினாலும், உழைப்பாலும் செல்வந்தன் ஆனான்.
முடிவு


ஆவியிடமிருந்து பாடம்


பிக்கு ஒரு பெரிய சூதாடி. அவனுடைய சம்பாத்தியத்தையும் சொத்தையும் சூதாடியே தோற்று விட்டான்.
வெட்கத்துடன், அவன் தன் குடும்பத்துடன் நகரத்தை விட்டு ஆஸ்டின் என்ற ஊருக்கு போனான். அங்கே அவனுடைய நண்பன் பாப்பி நன்றாக அமைக்கப்பட்ட தன் குடும்ப தொழிலை செய்துகொண்டிருந்தான்.
பாப்பி ஒரு மிருதுவான, இரக்க குணமுள்ளவன். தேவைப்படுவோர் யாவருக்கும் உதவி செய்வான்.
பிக்கு உடைய நிலையை அறிந்த பின்.
நல்லது ! இப்போதைக்கு எனக்கு ஒரு இடம்
பிக்கு, கவலைப்படாதே. நீ விரும்பும் வரை என்னுடன் தங்கலாம். நாம் உன்னுடைய பிரச்சனையை தீர்க்கலாம்.


பாப்பி, நான் ஒரு தொழிலை ஆரம்பிக்க நினைக்கிறேன். ஆனால், அதற்கு நிறைய பணம் தேவைப்படுகிறது.
என்ன விதமான தொழில் திட்டம் உன் மனதில் இருக்கு ?
நான் நிச்சயமாக சொல்ல முடியாது, நான் காண இருக்கிறேன். ஒரே விஷயம் என்ன வென்றால் அதற்கு பணம் எப்படி புரட்டுவது என்பது தான்.
கவலைப்படாதே, என்னிடம் சிறிது சேமிப்பு உள்ளது, அதை எடுத்துக்கொண்டு, சீக்கிரம் தொழில் ஆரம்பி.
பாபி 100 காசுகள் பிக்குவுக்கு தன் சேமிப்பிலிருந்து கொடுக்கிறான்.


நண்பா, 100 காசுகள் மிகக்குறைவு நான் யோசித்த தொழிலுக்கு, குறைந்த பட்சம் 10,000 காசுகள் தேவை.
பிக்கு, நம்முடைய வலிமையும் திறனையும் பொறுத்து தான் தொழில் செய்ய வேண்டும். சிறிதாக தொடங்கி, உன் லாபத்திலிருந்து அதை பெருக்கு. நீ விடாப்பிடியாக இருந்தால், நான் உனக்காக பணத்தை வெளியில் கடன் தான் வாங்க வேண்டும்.
பாப்பி 10000 காசுகள் கடன் வாங்கி பிக்குவுக்கு தருகிறான்.
தொழில் ஆரம்பிப்பதற்கு பதில், ஒரே நாளில், இந்த பணத்தை இரட்டிப்பு ஆக்க முடியும். நான் ஒரு சூதாட்டத்துக்கு போகிறேன். நான் அதிர்ஷ்டக்காரன் ஆகலாம்.
பிக்கு எல்லா பணத்தையும் தோற்று விடுகிறான்.
ஒஹ், ஆண்டவனே, நான் பணத்தை இரட்டிப்பு செய்ய இருந்தேன், ஆனால் எல்லாம் தோற்று விட்டேனே, பாபிக்கு பணம் எப்படி திருப்பிக் கொடுப்பேன்.
பிக்கு அமைதியாக வீட்டிற்கு வந்து, யாரிடமும் பேசாமல் தூங்கி விடுகிறான்.


பிக்கு திடீர் என எழுந்து தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள முடிவு செய்கிறான்.
பிக்கு வீட்டிற்கு வெளியில் வந்து ஒரு பெரிய மாங்காய் மரத்தை பார்க்கிறான். அதில் தூக்கில் தொங்க முடிவு செய்தான்.
திடீர் என ஒரு ஆவியை கண்டு திடுக்கிட்டான்.
ஹேய் யார் நீ ? இங்கே என்ன செய்கிறாய் ?
பிக்கு ஆவியிடம் சில வாரங்களாக நடந்ததை சொல்கிறான், எப்படி அவன் நகரத்தை விட்டு வரவேண்டியதாயிற்று, எப்படி அவன் பாப்பி கடன் வாங்கி கொடுத்த பணத்தையும் தொலைத்து விட்டான், என்று.


கவலைப்படாதே, நான் உன் கடனை தீர்த்து வைக்கிறேன், ஆனால், உன் வாழ்க்கையை முடித்துக்கொள்ளாதே.
அவனிடம் நிறைய பணம் இருக்கும் போல் தோன்றுகிறது.
ஹேய், உன்னிடம் நிறைய பணம் இருந்தால் எனக்கு 20,000 காசுகள் கொடு, 10,000 காசுகள் நான் பாப்பிக்கு கொடுத்துவிட்டு, மீதியில் நான் நிச்சயமாக தொழில் செய்கிறேன்.
நல்லது, நான் உனக்கு 10,000 காசுகள் கொடுக்கிறேன். உனக்கு அதிக 10000 எதற்கு. பாப்பி எப்படியும் உன்னை கவனிக்கிறான்.
எத்தனை நாட்கள், நான் ஏதாவது செய்தாக வேண்டும்.


சரி, இனி மேல் உன் மீது எதாவது கடன் ஏற்பட்டால் அதை நான் தீர்த்து வைக்கிறேன், ஆனால், சாகாதே.
நீ எனக்கு ஒரே தவணையில் பணத்தை கொடுக்கலாமே. ஏன் நீ எனக்கு பணம் கொடுத்து வாழ் நாள் முழுவதும் உதவ வேண்டும்.
நீ ஒரு சூதாடி, நீ உழைத்து சம்பாதிக்க மாட்டாய்.
அறிவுள்ளவன் யாரும் உன்னைப்போல் சூதாடிக்கு பணம் கொடுக்க மாட்டான். நான் உனக்கு சூதாட பணம் தருவேன் என்று நினைத்தாயா? நான் நிச்சயமாக கொடுக்க மாட்டேன். நீ சரியான முறையில் உபயோகிக்க மட்டும் தருவேன். இல்லையென்றால், நான் ஆவி என்று உனக்கு தெரியும், நான் உன்னை துன்புறுத்துவேன்.
இல்லை, இல்லை, என்னை நம்பு, நான் மாட்டேன். ஆனால் எனக்கு உதவி செய்வதால், உனக்கு என்ன லாபம் ?


நான் உனக்கு உதவ வில்லை, நான் பாபிக்கு உதவுகிறேன். அவன் கஷ்ட காலத்தில் எல்லோருக்கும் உதவுகிறான்.
நீ அவனை நம்பி இருப்பது எனக்கு தெரியும். உனக்கு கவனிக்கும் பொழுது, அவனுக்கு எந்த கஷ்டமும் வரக் கூடாது, ஆகவே நான் உன்னை உதவுகிறேன். உன்னைப்போல் ஒரு சூதாடியால் அவன் ஒரு நாள் பிரச்சனைக்கு ஆளாவான் என எனக்குத்தெரியும்.
நீ இதையெல்லம் ஏன் செய்கிறாய்.?
இந்த மாமரத்தை அவன் வெட்டாமல் இருப்பதினால் நான் அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.
இதில் விளையும் மாங்காயை விற்பதால், அவன் இதை வெட்டாமலிருக்கிறான்.
அவன் ஏன் இந்த மரத்தை வெட்டவில்லை என்பது எனக்கு முக்கியமல்ல, இந்த மரம் அவனுடையது, இதில் நான் வசிக்கிறேன். ஆகவே நான் அவனுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன்.


அவனுக்கு தெரியுமோ தெரியாதோ, நான் நன்றியுடன் இருக்கிறேன்.
ஒரு பேய் அதுக்கு மறைமுகமாக செய்த உதவியை மறக்கவில்லை, நான் என்னுடைய நண்பன் செய்த உதவியை எப்படி மறப்பேன். நான் இறந்தால், வாழ் நாள் முழுக்க அவன் என் குடும்பத்தை காக்க வேண்டியதாகிவிடும்.
பிக்கு இப்பொழுது மாறி விட்டான். சூதாட்டத்தை விட்டு உழைக்க ஆரம்பித்தான்., சிறிது காலத்தில், நிறைய சம்பாதித்து ஒரு பெரிய வீடு கட்டினான். தோட்டத்து புறத்தில், பல மாங்காய் மரங்களை நட்டி, ஆவிக்கு, நன்றியை தெரிவித்தான்.
முடிவு


அப்பா மேல் அன்பு


ராபர்ட் தன் வாழ்க்கை முழுவதும் தன் பிள்ளைகளுக்காக உழைத்தான். இப்பொழுது முதுமையில் இருக்கிறான்.
அவனுக்கு அவன் பிள்ளைகளிடமிருந்து, தக்க அன்பும் பாதுகாப்பும் கிடைக்கவில்லை.
ஜேக்சன், ராபர்ட் உடைய சகோதரன் இதைபற்றி அறிகிறான்.


நீங்கள் உங்கள் அப்பாவை இந்த வயதான காலத்தில் கவனிக்க வேண்டும்.
சித்தப்பா, நாங்கள் வேண்டியதை எல்லாம் செய்கிறோம்.
அவர் எங்களுக்கு பணமோ, சொத்தோ கொடுக்கவில்லை, வேலையாட்களை வைக்க.
ஒஹ், நீங்கள் தவறாக எண்ணுகிறீர்கள், அவன் செல்வத்தை இந்த வீட்டில் எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறான்.
நீங்கள் அவனை நல்லபடி கடைசிவரை கவனித்தால், அனைவருக்கும் சமமாக பங்கிட்டு கொடுப்பேன் என்று என்னிடம் சொன்னான்.


நாங்கள் எப்படி நீ சொல்வதை நம்புவது ?
சரி, வாருங்கள், நான் காட்டுகிறேன்.
ஜேக்சன் அவர்களை வீட்டிற்கு வெளியில் கொண்டுசெல்கின்றான்.
சரி, இங்கே தோண்டு.
அவர்கள் தோண்டும் போது ஒரு தாமிர பாத்திரம், பொற்காசுகளுடன், தென்படுகிறது.
அவர்கள் அதை தொடும்பொழுது, அது மறைந்து விட்டது.
என்ன இது விளையாட்டு?
நிச்சயமாக இல்லை. பணம் மந்திரத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. உங்கள் தந்தை நினைத்தால் தான் உங்களுக்கு.
அவர் உயிருடன் இருக்கும் வரை, அவரை சந்தோஷமாக வைத்துக்கொள்ளுங்கள். இல்லை என்றால், உங்களுக்கு புதையல் என்றுமே கிடைக்காது.


நாம் நமது தந்தையை நன்றாக கவனிக்க வேண்டும். அவரை நம் சேவையால் சந்தோஷப்படுத்த வேண்டும்.
இரு சகோதரர்களும் நல்லபடி தந்தையை கவனிக்கலானார்கள்.
நன்றி மக்களே, ஆண்டவன் ஆசி உண்டாகட்டும்.
சில மாதங்களுக்கு பின் ராபர்ட் இறந்து விட்டார்.. ஒரு நாள், ஜேக்சன் வீட்டில் அவனுடைய மனைவி புகார் செய்தாள்.
உங்கள் அண்ணன் உங்களை விட பரவாயில்லை. அவர் சம்பாதித்து நிறைய செல்வத்தை தன் பிள்ளைகளுக்கு விட்டு சென்றார்..


நீ அது உண்மை என நினைக்கிறாயா. என் அண்ணன் எந்த செல்வமும் விட்டு செல்ல வில்லை. எனக்கு கொஞ்சம் மந்திரம் தெரியும், அதை , என் அண்ணனுடைய பிள்ளைகளை வழி மாற்ற உபயோகித்தேன்.
வொவ், நீங்கள் ஒரு மந்திரவாதி என எனக்குத்தெரியாது.
உங்களுடைய தந்திரத்தை அறிந்து அவர்கள் வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்.
நான் ஏன் கவலைப்படவேண்டும்? அவனுடைய கடைசி காலத்தில் அவன் குடும்பத்தால் நல்ல படி கவனிக்கப்பட்டான்


உங்கள் மந்திரத்தால், நீங்கள் ஏன் நிறைய சம்பா திக்கக்கூடாது?
என் அண்ணன் மந்திரத்தால் நான் சம்பாதிக்க என்றும் விரும்பவில்லை. நான் அவரை மதித்தேன். அவருக்கு எதிராக போகவில்லை.
ஜேக்சன் மந்திரத்தை பயன்படுத்தி நிறைய பணம் சம்பாதித்தான்.
ராபர்ட் வீட்டில், இருவரும் முழு தோட்டத்தையும் தோண்டி, எதுவும் கிடைக்க வில்லை.
சித்தப்பா நம்மை ஏமாற்றி விட்டார். போய் அவரிடம் பேசலாம்.
நீங்கள் ஏன் எங்களிடம் தப்பாக சொன்னீர்கள்
அதை என் அண்ணனுக்காக செய்தேன்.


நீங்கள், தந்தையை மதித்ததும் இல்லை, அன்பு செலுத்தியதும் இல்லை. நீங்கள் அவர் பணத்தின் பின்னாலேயே இருந்தீர்கள்.
இது ஏட்டிக்கு போட்டி. நீங்கள், செல்வத்திற்காக அவர் முன் நடித்தீர்கள், நான் என் மந்திரத்தால், உங்களுக்கு பாடம் கற்பித்தேன். நீங்கள் போகலாம்.
நான் சரியாகத்தான் செய்திருக்கிறேன். என் மந்திரத்தை உபயோகிக்காமல் இருந்திருந்தால், என் அண்ணன் பிள்ளைகள் வாழ்க்கையின் பாடத்தை கற்றிருக்க மாட்டார்கள்.
முடிவு

# தாய்நாட்டுப்பற்று




ராஜா இந்திரசேனன் கன்சல் நாட்டை ஆண்டு வந்தார்.


அண்டை நாட்டு அரசர் அந்த நாட்டை தாக்கினார்.


இந்திரசேனன் அவர்களுக்கு எதிராக சண்டையிட்டு தோற்றுப் போனார்.


இந்திரசேனன் மறைவான இடத்தில் ஒளிந்துகொண்டார்.
வீரசேனன் தைரியமான ஒரு வீரன். போர் இல்லாத சமயங்களில் அவன் தனது வயலில் சென்று பணி செய்வான்.
எதிரியின் திடீர் தாக்குதல் காரணமாக அவனால் போரில் சண்டையிட முடியவில்லை.
தனது தாய்நாடு எதிரிகளால் தாக்கப்படுவதைக் கேள்விப்பட்டு வீரசேனன் கவலைகொண்டான்.
அவன் தனது தாய்நாட்டை விடுவிக்க முடிவு செய்தான். அவன் மற்றொரு அண்டை நாட்டிற்கு சென்று வேலை கேட்டான்.
அரசருக்கு வணக்கம். எனக்கு தயவுசெய்து உங்களது ராணுவத்தில் வேலை அளிக்க முடியுமா.
நீ சோதனையில் வெற்றி பெற்றால் மட்டுமே உனக்கு வேலை கிடைக்கும்.


வீரசேனன் வீரத்துடனும் விவேகத்துடனும் அனைத்து வீரர்களையும் எதிர்கொண்டான்.
நான் உண்மையிலேயே உனது தைரியம் கண்டு மகிழ்கிறேன். நான் உன்னை ராணுவப் படைத்தலைவராக நியமிக்கிறேன்.
சிறிது நாட்கள் கழித்து, போஜ அரசர் அவரது எதிரிகளுடன் போரிட நேரிட்டது.
வீரசேனன் போரில் அரசனைக் காப்பாற்றுகிறான்; வெற்றியும் பெறுகிறான்.


வீரசேனா, நீ போரில் ஏற்பட்ட வெற்றியில் பெரும் பங்கு வகித்து எனது உயிரைக் காப்பாற்றியுள்ளார். உனக்கு என்ன வேண்டும் கேள்?
வீரசேனனுக்கு கண்ணீர் வந்தது.
ஏன் அழுகிறாய்?
அரசே இது ஆனந்தக் கண்ணீர்.


வீரசேனா நான் உனக்கு ஏதாவது அளிக்க விரும்புகிறேன். என்ன வேண்டுமோ கேள்.
அரசே, எனது தாய்நாடு எதிரியின் பிடியில் இருக்கிறது. நான் என் தாய்நாட்டிற்கு விடுதலை அளிக்க விரும்புகிறேன். அவர்களைப் போரிட்டு வெல்வதற்கு எனக்கு ஒரு சிறிய படை ஒன்று வேண்டும்.
உனது தாய்நாட்டுப் பற்றைக் கண்டு வியக்கிறேன். எதற்கு சிறிய படை? நீ பெரிய படையைத் திரட்டிக் கொண்டு சென்று வெற்றியை ஈட்டி வா.
வீரசேனன் போர் செய்தான். வீரசேனன் போரில் வெற்றி பெற்றான்.


வீரசேனன் அரசரைத் தேடிக் கண்டுபிடித்து அவரை மீண்டும் அரசனாக்கினான்.
நான் உனக்கு மிகவும் கடன்பட்டுள்ளேன். என்ன வேண்டுமோ கேள்.
எனக்கு ஒரு சாக்கு விதைகளைக் கொடுங்கள் அரசே. இப்போது போர் எதுவும் இல்லாததால் நான் வயலில் சென்று பணி செய்ய விரும்புகிறேன்.
ஒரு சாக்கு விதைகள் மட்டுமா??
இப்போது எனது நாடு விடுதலைப் பெற்றுவிட்டது, இதற்கு மேல் எனக்கு என்ன வேண்டும்?
அரசர் அவனுக்கு நிறைய பணம் அளித்து கௌரவப்படுத்தினார்.
முற்றிற்று




**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**



**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**

Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com www.indianvedicschool.com
+91 7337200273